இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 142 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 17 – வியாழக்கிழமை 01 ஜனவரி 2026 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 142: Thiruvalluvar Year - 2056 - Margazhi 17 - Thursday 01 January 2026 - Madurai 16 Pages ₹ 5.00


# திராவிடப் பொங்கல் விழாவுடன் மலரட்டும் புத்தாண்டு - 2026



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்களின் அன்பு உடன் பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும், ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்து மடல்.**

உலக மக்கள் அனைவருமே ஒவ்வொரு புத்தாண்டுப் பிறப்பையும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றனர். தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கை மிகுந்த புத்தாண்டாக 2026-ஆம் ஆண்டு நிச்சயமாக அமையும் என்ற உறுதியினை வழங்கி, கழக உடன் பிறப்புகளுக்கும் பொதுமக்களுக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகளை உரித்தாக்குகிறேன்.

**இந்தப் புத்தாண்டு, நம் கழக உடன் பிறப்புகளுக்கு வெற்றிக்கான புத்தாண்டு! திராவிட மாடல் அரசின் சாதனைகள் தொடர்கின்ற புத்தாண்டு! தமிழ்நாட்டு மக்களின் நலன் காக்கும் திட்டங்கள் தொடர்ந்திடும் புத்தாண்டு!**

2021-ஆம் ஆண்டு மே 2-ஆம் நாள் தமிழ்நாட்டு மக்கள், திராவிட முன்னேற்றக் கழகம் 6-ஆவது முறையாக ஆட்சி அமைப்பதற்கான வெற்றியைத் தந்த நேரத்தில், கொளத்தூர் தொகுதியின் வெற்றிச் சான்றிதழை நம் உயிர்நிகர்த் தலைவர் கலைஞர் அவர்கள் ஓய்வுகொள்ளும் நினைவிடத்தில் காணிக்கையாக்கிய பின், செய்தியாளர்களிடம் உங்களில் ஒருவனான நான் சொன்ன சொற்களை, நானும் மறக்கவில்லை; நீங்களும் மறந்திடவில்லை; தமிழ்நாட்டு மக்களும் மறந்திருக்க மாட்டார்கள்.

**திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கிடும் வகையிலும், தமிழர்கள் அனைவரும் பங்கேற்றிடும் வகையிலான கலை - இலக்கிய - விளையாட்டுப் போட்டிகளுடன் திராவிடப் பொங்கல் விழாவை ஊர்தோறும் சிறப்பாக நடத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.**

**“எங்களுக்கு வாக்களித்தவர்கள் சரியாகத்தான் வாக்களித்திருக்கிறோம் என்று மகிழ்ச்சி அடையக்கூடிய வகையிலும், வாக்களிக்காதவர்கள் இவர்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோமே என்று நினைக்கக்கூடிய அளவிலும் தி.மு.க.வின் ஆட்சி இருக்கும்” - இதுதான் உங்களில் ஒருவனான நான் அன்று அளித்த வாக்குறுதி. இதைத்தான், ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்கிற திராவிட மாடல் ஆட்சியின் இலக்கணமாகக் கொண்டு நமது அரசு செயல்பட்டு வருகிறது.**

உங்களில் ஒருவனான நான், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நாள் முதல், மக்கள் நலனுக்கான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறேன். மகளிருக்கு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா விடியல் பயணத்திற்கான கையெழுத்தில் தொடங்கி, **‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’, ‘புதுமைப் பெண்’, ‘நான் முதல்வன்’, ‘மக்களைத் தேடி மருத்துவம்’, ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’, ‘தோழி விடுதி’, ‘அன்புச்சோலை’, ‘அன்புக்கரங்கள்’, ‘தாயுமானவர் திட்டம்’, ‘கலைஞர் கனவு இல்லம்’** எனப் பல முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 4 ஆண்டுகளில் தொழில் முதலீடுகளை ஈர்த்து, தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட தொழில்வளர்ச்சியை உருவாக்கி, இளைய தலைமுறையினருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி வருகிறோம்.

இந்திய மாநிலங்களில் கல்வி, சுகாதாரம் உள்பட பல இலக்குகளில் தமிழ்நாடு முதன்மையாகத் திகழ்கிறது என்பதை நாம் சொல்லவில்லை; ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கையும், ஒன்றிய அரசின் துறைகள் சார்ந்த அறிக்கைகளும் தெரிவிக்கின்றன.

இந்திய அளவில் புகழ்பெற்ற பத்திரிகைகள், ஆய்வு நிறுவனங்கள், உலகளாவிய பொருளாதார இதழ்கள்; தமிழ்நாட்டின் அனைவருக்குமான ஒருங்கிணைந்த - அனைத்துப் பகுதிகளுக்கும் பரவலாக்கப்பட்ட வளர்ச்சி குறித்து, தரவுகளுடனான செய்திகளை வெளியிட்டுள்ளன.

## உங்களில் ஒருவன்

எல்லாவற்றுக்கும் மேலாக, திராவிட மாடல் அரசின் திட்டங்களால் பயன்பெற்று வரும் தமிழ்நாட்டு மக்கள், இந்தச் சாதனைத் திட்டங்கள் பற்றி மனம் மகிழ்ந்து சொல்கிறார்கள்.

**இதற்கு முன்புவரை, அரசு நிகழ்ச்சிகள் என்றால் முதலமைச்சரும் அமைச்சர்களும் அதிகாரிகளும் மேடையில் இருப்பார்கள். திட்டங்களால் பயன் பெறப்போகும் மக்கள் எதிரில் அமர்ந்திருப்பார்கள். இப்போது அதுமுற்றிலும் மாறியிருக்கிறது.**

**‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’, ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் முதலமைச்சரும் அமைச்சர்களும் அதிகாரிகளும் பார்வையாளர்களாக உட்கார்ந்திருந்தோம். அரசின் திட்டங்களால் பயன் பெற்றவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தை, மேடையில் நின்று உள்ளத்து உணர்வுடன் விளக்கினார்கள். இந்த மாற்றம்தான்! திராவிட மாடல் ஆட்சியின் மகத்தான சாதனை!**

உங்களில் ஒருவனான நான், 2026-ஆம் ஆண்டிலும் இந்தச் சாதனைகள் தொடர வேண்டும் என்றும், மேலும் ஐந்தாண்டுகள் புதிய புதிய சாதனைத் திட்டங்கள் நிறைவேற வேண்டும் என்றும் உறுதி ஏற்றிருக்கிறேன்.

கழகத்தின் அன்பு உடன்பிறப்புகளான உங்கள் மீதுள்ள நம்பிக்கைதான் என்னுடைய உறுதிக்குக் காரணம். தமிழ்நாட்டின் தொடர்ச்சியான முன்னேற்றப் பாதையில் நாம் செல்லவேண்டிய தூரம் இன்னும் அதிகமாக உள்ளது. நிறைவேற்றிய திட்டங்கள் உரிய பலனைத் தருகிற அதேநேரத்தில், நிறைவேற்ற வேண்டிய கடமைகள் நிறைய உள்ளன.

பத்தாண்டுகாலம் தமிழ்நாட்டைப் படுகுழியில் தள்ளிய முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின் சீரழிவிலிருந்து, தமிழ்நாட்டை மீட்பதற்கே இந்த ஐந்தாண்டுகள் பெரும்பாடு பட்டிருக்கிறோம்; தமிழ்நாட்டை மீட்டிருக்கிறோம். அதனால்தான் நம் மீது தமிழ்நாட்டின் அனைத்துத்தரப்பு மக்களுக்கும் நம்பிக்கை உள்ளது. உரிமையுடன் தங்கள் கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள். தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள்.

**நமக்குள்ள பொறுப்பை உங்களில் ஒருவனான நான் ஒருபோதும் தட்டிக் கழிப்பதில்லை. கொடுத்த வாக்குறுதியிலிருந்தும் நிறைவேற்றவேண்டிய கடமையிலிருந்தும் ஒருபோதும் பின்வாங்க மாட்டேன். எந்தக் கோரிக்கையாக இருந்தாலும் அதனைக் கவனத்தில் கொண்டு பரிசீலித்து நிறை வேற்றுவதற்கான காலம் நிச்சயம் கனியும்!**

**ஆளுங்கட்சி நிம்மதியாகத் தனது பணிகளைக் கவனிப்பதும், எதிர்க் கட்சி களத்தில் நின்று போராடுவதும் தான் அரசியலின் இயல்பு. ஆனால்,**

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## அமைதி, நல்லிணக்கம், மகிழ்ச்சி நிரம்பி

# புதிய வெற்றிகள் நிறைந்த ஆண்டாக அமையட்டும் 2026!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜன. 1 - “அமைதி, நல்லிணக்கம், மகிழ்ச்சி நிரம்பி புதிய வெற்றிகள் நிறைந்த ஏற்றமிகு ஆண்டாக 2026 அமையட்டும்” என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆங்கிலப் புத்தாண்டையொட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:-

பல வகைகளிலும் தமிழ்நாட்டுக்கு வெற்றிகரமான ஆண்டாக அமைந்த 2025க்கு விடைகொடுத்து, இதுவரை காணாத மாபெரும் வெற்றியை வழங்கவுள்ள 2026இல் அடியெடுத்து வைக்கத் தயாராகிறோம்!

தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் எழுச்சிக்கும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கும் மிகச் சிறந்த ஆண்டாக 2025 அமைந்தது என்றால் மிகையாகாது. பொருளாதார வளர்ச்சியிலும் GSDP வளர்ச்சியிலும் முதலிடம் என நமக்குக் கிடைத்துள்ள அங்கீகாரங்கள் 2030க்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் நம் கனவுக்கு வலுவூட்டுகிறது.

மகளிர், உழவர், மாணவர், மாற்றுத்திறனாளிகள், மீனவர், வணிகர், நெசவாளர், விளிம்புநிலை மக்கள், தொழில்முனைவோர், விளையாட்டு வீரர்கள் என அனைத்துத் தரப்பினரின் மனங்களையும் மகிழ்விக்கும் திட்டங்கள் நிறைந்த ஆண்டாக 2025 அமைந்தது. வீடற்ற மக்களுக்கு வீடுகளை வழங்கும் கலைஞர் கனவு இல்லம் திட்டமும், இதுவரை இல்லாத அளவுக்குப் பட்டாக்களை வழங்கி நிலம் எனும் அதிகாரத்தை



எளியோருக்கு வழங்கியதும் நமது திராவிட மாடல் அரசில் முன்னுரிமை யாருக்கு என்பதற்குச் சான்றாக அமைந்தன.

‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்களால் மக்களின் தேவைகள் உடனடியாகத் தீர்க்கப்பட்டு வருகின்றன, ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ முகாம்களால் உயர்தரச் சிறப்பு மருத்துவச் சேவைகள் மக்களுக்குக் கிடைத்து வருகின்றன. கல்வியில் சிறந்த தமிழ்நாடு, வெல்லும் தமிழ்ப் பெண்கள் என 2025இல் தலைநிமிர்ந்துள்ளோம்! காலை உணவுத் திட்டமும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமும் பெருமளவில் விரிவுபடுத்தப் பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களுக்கும் பரவலான, சமத்துவமான வளர்ச்சியும் சாத்தியமாகி வருகிறது.

### உலகத்துக்குப் பறைசாற்றிய 2025!

தொகுதி மறுசீரமைப்பு ஆபத்தை எதிர்த்து அகில இந்திய அளவில் அணிதிரட்டல், சிறப்புத் தீவிர வாக்காளர் திருத்தப் பட்டியல் சூழ்ச்சியில் இருந்து நம் மக்களின் வாக்குரிமையைக் காப்பது, மாநில சுயாட்சிக்காக உயர்நிலைக் குழு அமைத்தது, மாநிலக் கல்விக் கொள்கையை வெளியிட்டது, கல்வி நிதிக்காக ஒன்றிய அரசிடம் உரிமைக்குரலை எழுப்பியது, ஆளுநரின் அதிகார மீறலுக்கு எதிரான வரலாற்றுச் சிறப்புமிக்க உச்சநீதிமன்றத் தீர்ப்பினைப் பெற்றது என வழக்கம் போல இந்த ஆண்டும் மாநில உரிமைகளுக்கான நமது போராட்டங்களுக்கும் குறைவே இல்லை.

மொத்தத்தில் தமிழ்நாடு யாருக்கும் தலைகுனியாது, தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என உலகத்துக்குப் பறைசாற்றிய ஆண்டுதான் 2025!

நாம் இதுவரை பெற்ற வெற்றிகள் தந்த ஊக்கத்தோடும், போராட்டங்களால் பெற்ற துணிவோடும் 2026 இல் மாபெரும் வெற்றியை நோக்கி முன்செல்கிறோம்! நாம் என்றால் தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள் அனைவரும் பெறப்போகும் வெற்றியைத்தான் குறிப்பிடுகிறேன். அமைதியும், நல்லிணக்கமும், மகிழ்ச்சியும், புதிய வெற்றிகளும் நிறைந்த ஏற்றமிகு ஆண்டாக 2026 அனைவருக்கும் அமைந்திட எனது புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.